## தலைப்பு 06 – அரசாங்க சேவை ஆணைக்குழு

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 15 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூலை 06 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றது.

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.2(ஆ) பந்தியில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்பு தொடர்பாக முன்னைய ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| பந்திக்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை |
|---|---|---|
| 1.5.3 (ii) | நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றின் பெறுமதி சரியாக காணப்பட்டிருக்காததால் நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பெறுமதி மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் ஒதுக்க பெறுமதி என்பன சரியானதாக காணப்படவில்லை. | 2019 சனவரி 01 இல் உள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பெறுமதி சீர் செய்யப்படுதல். |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சுற்றறிக்கையில் வழங்கப்பட்ட மாதிரியின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். | நான் அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றேன். |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டின் திறைசேரியின் ஆண்டிறுதியிலுள்ள இறுதி நிறிக்கூற்றுக்கள் பின்னிணைப்புக்களாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | திறைசேரியின் ஆண்டிறுதியிலுள்ள இறுதி நிதிக்கூற்றுக்கள் பின்னிணைப்புக்களாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். | நான் அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றேன். |

**1.6.2 நிதி நிலைமைக் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 39,000,000 தொகையான குத்தகை சொத்துக்கள் நிதி நிலைமைக் கூற்றில் இரட்டிப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சொத்துக்கள் கணக்குகளிற்கு ஒரு தடவை மாத்திரமே கொண்டுவரப்பட வேண்டும். | நான் அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றேன். |
| (ஆ) | நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றின் பெறுமதி திருத்தம் செய்யப்பட்டிருக்காததால் நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பெறுமதி மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் ஒதுக்க பெறுமதி என்பன சரியானதாக காணப்படவில்லை. | நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றின் பெறுமதி சரியாக குறிப்பிடப்பட வேண்டும. | ஆரம்ப மீதியில் ரூபா 14,095,070 தொகையான வேறுபாடொன்று காணப்பட்டமை மற்றும் 05 நிழற்பிரதியிடும் இயந்திரங்களை உள்ளடக்குவதற்குப் பதிலாக தவறுதலாக 10 நிழற்பிரதியிடும் இயந்திரங்கள் உள்ளடக்கப்பட்டமை காரணமாக பெறுமதிகள் சரியாக காணப்படவில்லை. |
| (இ) | ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் மீதி சரியாக காணப்படாததால் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் ஒதுக்கமும் சரியாக காணப்படவில்லை. | ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் சரியான மீதி நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டும். | நான் அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றேன். |
| (ஈ) | நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் குத்தகை சொத்துக்களின் பெறுமதி ரூபா 521,040 தொகையான முத்திரைத் தீர்வையை சேர்த்த பின்னர் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் குத்தகை சொத்துக்கள் சரியாக குறிப்பிடப்பட வேண்டும். | நான் அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றேன். |
| (உ) | அலுவலக உபகரணம் மற்றும் தளபாடத்தின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 78,000 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | அலுவலக உபகரணம் மற்றும் தளபாடத்தின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் சரியாக குறிப்பிடப்பட வேண்டும். | நான் அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | ஆணைக்குழுவிற்கு சொந்தமான ரூபா 875,000 கிரயமான வாகனமொன்று 2019 சனவரி 09 இல் ரூபா 1,258,000 தொகைக்கு விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும் வாகனம் தொடர்பான தகவல்கள் ஆரம்ப மீதியில் அல்லது அகற்றல்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய பெறுமதிகள் ஆரம்ப மீதியில் அல்லது அகற்றல்களின் கீழ் உள்ளடக்கப்பட வேண்டும். | வாகனத்தை அகற்றுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததால் ஆரம்ப மீதியில் மற்றும் அகற்றல்களின் கீழ் இது உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | 2019 ஆகஸ்ட் 01 இல் நடாத்தப்பட்ட ஏலவிற்பனையில் 09 வகையான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் 10 பொருட்கள் அழிக்கப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பான தகவல்கள் அகற்றல்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய பெறுமதிகள் ஆரம்ப மீதியில் அல்லது அகற்றல்களின் கீழ் உள்ளடக்கப்பட வேண்டும். | 2019 ஆகஸ்ட் 09 இல் பெறுமதிக் கணிப்பீட்டை பெற்றுக்கொள்ளும் சமயத்தில் அகற்றலிற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததால் ஆரம்ப மீதியில் மற்றும் அகற்றல்களின் கீழ் இது உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றின் பெறுமதி திருத்தம் செய்யப்பட்டிருக்காததால் நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பெறுமதி மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் ஒதுக்க பெறுமதி என்பன சரியானதாக காணப்படவில்லை. | நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றின் பெறுமதி சரியாகக் குறிப்பிடப்பட வேண்டும். | ஆரம்ப மீதியில் உள்ள ரூபா 14,095,070 வேறுபாடு காணப்படுகின்றமை மற்றும் 05 நிழற்பிரதியிடும் இயந்திரங்களை உள்ளடக்குவதற்கு பதிலாக தவறுதலாக 10 நிழற்பிரதியிடும் இயந்திரங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தமையினால் பெறுமதிகள் சரியானதாக காணப்படவில்லை. |

**1.6.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| | அவதானிப்புக்கள் | | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 1647(ஆ) | வாகனங்கள் அவற்றின் உபகரணங்கள் மீது முழுமையான மெய்மையாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வாகனங்கள் மற்றும் அவற்றின் உபகரணங்கள் மீது முழுமையான மெய்மையாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் மெய்மையாய்வு ஒன்றை மேற்கொள்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

**(ஆ) அரச நிதிச் சுற்றறிக்கைகள்**

---

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 2016 மார்ச் 31 ஆம் திகதிய 05/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1.1 தொடக்கம் 3.1.6 வரையான பிரிவுகள் | 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2019 ஆகஸ்ட் 28 இல் 05 மாத தாமதம் ஒன்றுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையில் குறிப்பிட்டவாறு வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2019 மார்ச் 31 இல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நான் அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றேன். |
| (ii) | 3.1.4 ஆம் பந்தி | பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் பற்றாக்குறைகள் மற்றும் மிகைகள் அறிக்கையிடப்பட்டு அது தொடர்பான நடவடிக்கைகள் பெப்ரவரி 17 இற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நான் அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றேன். |
| (iii) | 3.1.5 ஆம் பந்தி | பொது 47 படிவத்தின் பிரகாரம் வைப்புச் செய்யப்பட வேண்டிய பொருட்கள் தொடர்பாக பெப்ரவரி 26 இற்கு முன்னர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நான் அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றேன். |
| (iv) | 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். | உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தை உள்ளடக்கி வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பதற்கு தொடர்ந்துவரும் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) அரச கணக்குகள் சுற்றறிக்கை**

---

| | | | |
|---|---|---|---|
| 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் குறிப்பு – (i) | 2019 திசெம்பர் 31 இல் மோட்டார் வாகனம் ஒன்றுக்கு ஏற்பட்ட விபத்து காரணமாக ரூபா 301,962 தொகையான நட்டம் நிதிப்பிரமாணம் 109 இன் கீழான பதிவளிப்புக்கள் மற்றும் அறவீடுகள் | உரிய பெறுமதிகள் நிதிப்பிரமாணம் 109 இன் கீழான பதிவளிப்புக்கள் மற்றும் அறவீடுகள் தொடர்பான கூற்றின் கீழ் உள்ளடக்கப்பட | விபத்து தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை திசெம்பர் 31 வரையிலும் பெறப்பட்டிருக்காததால் உரிய கூற்றின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பான கூற்றின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | |

**(ஈ) பெறுகைக் கைநூல்**

| | | | |
|---|---|---|---|
| படிவம் 4.2.1 | பெறுகையின் வகை பெறுகைத் திட்டத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | பெறுகையின் வகை பெறுகைத் திட்டத்தின் மாதிரியில் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். | பிரிவுகளிலிருந்து பெறப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பொருட்களுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்தன. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| ஆணைக்குழுவிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்ட மற்றும் ஆணைக்குழுவிற்கு இடமாற்றம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை தீர்ப்பனவு செய்தல் தாமதமாகியிருந்தது. | 2019 யூன் 27 ஆம் திகதிய 05/2019 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றறிக்கையின் பிரகாரம் இடமாற்றம் பெற்றுச்சென்ற மற்றும் இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்களின் தீர்ப்பனவு செய்யப்படாத கடன் மீதிகள் தொடர்பாக தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 1.6, 1.7 மற்றும் 6.3 ஆம் பிரிவுகளின் பிரகாரமும் 2004 ஒக்தோபர் 11 ஆம் திகதிய 118 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரமும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு இரண்டு மாதங்கள் கடப்பதற்கு முன்னரே உரிய உத்தியோககத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. |

**3.** **செயற்பாட்டு மீளாய்வு**

**3.1** **பெறுகை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| பதிவேட்டு அறைக்கு ரூபா 429,000 தொகையான இறாக்கைகளை கொள்வனவு செய்யும் போது உத்தரவாதக் காலப்பகுதி தொடர்பான உடன்படிக்கை ஒன்று செய்யப்பட்டிருக்காததுடன் இறாக்கைகள் துருப்பிடித்திருந்தன. | பெறுகையின் போது உத்தரவாதக் காலப்பகுதி தொடர்பாக உடன்படிக்கை செய்யப்பட வேண்டும். | நான் அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றேன். உரிய வழங்குநர்களுக்கு தொலைபேசி மூலம் துருப்பிடித்த இறாக்கைகளை மீண்டும் மாற்றுவதற்கு அல்லது அவற்றுக்கு தீந்தை பூசுவதற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. |

**3.2** **சொத்து முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | குழாம் வாகனம் ஒன்றுக்கு 2019 ஆம் ஆண்டில் திருத்தங்களிற்காக ரூபா 25,500 தொகையொன்றும் எரிபொருளுக்காக ரூபா 27,724 தொகையும் ஏற்பட்டிருந்த போதிலும் அது 58 கிலோமீற்றர் தூரம் மாத்திரமே ஓடியிருந்தது. | 1997 செப்தெம்பர் 30 ஆம் திகதிய 353 ஆம் இலக்க, 2009 நவம்பர் 13 ஆம் திகதிய 438 ஆம் இலக்க மற்றும் 2003 சனவரி 03 ஆம் திகதிய 353(5) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரமும் நிதிப்பிரமாணம் 771 இன் பிரகாரமும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எரிபொருள் நுகர்வு உயர்வாக காணப்படுகின்றமை மற்றும் வாகனம் தொடர்பாக உயர் பராமரிப்பு கிரயமொன்றை மேற்கொள்ள வேண்டியிருந்தமை காரணமாக வாகனத்தை வேறொரு நிறுவனத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஆ) | ஆணைக்குழு ஆண்டு முழுவதும் சிக்கனமாகவும் செயற்திறனாகவும் ஜீப் வண்டியொன்றை பயன்படுத்தியிருக்கவில்லை. | 1997 செப்தெம்பர் 30 ஆம் திகதிய 353 ஆம் இலக்க, 2009 நவம்பர் 13 ஆம் திகதிய 438 ஆம் இலக்க மற்றும் 2003 சனவரி 03 ஆம் திகதிய 353(5) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரமும் நிதிப்பிரமாணம் 771 இன் பிரகாரமும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எரிபொருள் நுகர்வு உயர்வாக காணப்படுகின்றமை மற்றும் வாகனம் தொடர்பாக உயர் பராமரிப்பு கிரயம் ஏற்படுத்தப்பட வேண்டியிருந்தமை காரணமாக அவசரமானதும் அத்தியாவசியமானதுமான கடமைகளுக்கு மாத்திரமே வாகனம் பயன்படுத்தப்பட்டிருந்தது. |

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆணைக்குழுவிலுள்ள வெற்றிடங்களின் மொத்த எண்ணிக்கை 3 உதவிச் செயலாளர் பதவிகள் மற்றும் முறைமை பகுப்பாய்வாளர் பதவி மற்றும் சட்ட உத்தியோகத்தர் பதவி ஆகிய பெயரினாலான சிரேஷ்ட மட்டத்திலுள்ள 5 பதவிகள் உள்ளடங்கலாக 21 ஆகக் காணப்பட்டது. | அத்தியாவசியமான பதவிகள் காணப்படுகின்றதால் அத்தகைய வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | இலங்கை நிர்வாக சேவையிலுள்ள பதவிகளில் நிலவிய அனைத்து வெற்றிடங்களும் 2020 யூன் 03 அளவில் நிரப்பப்பட்டிருந்தன. குழாய் பொருத்துநர்கள் மற்றும் மின்னியலாளர்கள் அட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். ஆரம்ப தரத்திலுள்ள வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு 2020 ஜனவரி 22 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இடைநிறுத்தப்பட்டிருந்தது. |